(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 116.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2011, ஓகத்து 24, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0584/ '10

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த நான்கு வருடங்களாக பல்தரப்பு முகவர்களிடமிருந்தும் நட்பு நாடுகளிடமிருந்தும் இருதரப்பு அடிப்படையில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான மேலதிக சலுகை காலத்திற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பையும் திருப்பிச் செலுத்தப்பட்ட அளவையும்;

(ii) அவ்வசதிகள் எப்போது வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) எந்நோக்கங்களுக்காகஅது வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட கடனிற்காக முன்னெடுப்புக் கட்டணம், கடப்பாட்டுக் கட்டணம், முகாமைத்துவ அல்லது நிர்வாகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், அல்லது பல்வேறு பெயர்களில் வேறு ஏதாவது செலவுகள் இருந்தனவா என்பதையும்;

(v) இவை ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டியனவாக இருந்தனவா அல்லது வருடாந்தம் செலுத்தப்பட வேண்டியனவாக இருந்தனவா என்பதையும்;

(vi) ஒரு செலவுக் காரணி என்ற ரீதியில் நாட்டின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வருடாந்தம் செலுத்தப்படவேண்டிய மேலேயுள்ள செலவுகளின் மொத்தத் தொகையினையும்

அவர் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1083/ '11

2\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணனி விஞ்ஞான ஆய்கூடங்களைக் கொண்ட அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டில் புதிய பாடசாலை கணனி விஞ்ஞான ஆய்கூடங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்கென 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கணனிப் பாடம் கற்பிப்பதற்கு நிரந்தர பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இப்பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1094/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரின் மற்றும் அவரின் பிரத்தியேக ஆளணிக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்களில் ஒப்பந்த மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி வாகனங்களின் பதிவு இலக்கம் மற்றும் வகை யாதென்பதையும்,

(iv) மேற்படி வாகனங்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியின் பெயர், வயது, சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி ஆகியவை வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) இவர்கள் அரச சேவையிலிருந்து மேற்படி பதவிகளுக்கு இணைக்கப் பட்டுள்ளார்களாயின் எந்நிறுவனங்களிலிருந்து என்பதையும்,

(iii) ஒப்பந்த அடிப்படையில் புதிதாக சாரதிகள் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரின் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்களின் இலக்கம் மற்றும் வகை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1201/ '11

4.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2004 ஆம் ஆண்டு சுனாமி(ஆழிப்பேரலை) அனர்த்தத்தின்போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 460 வீடுகள் இன்னும் தேவைப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஏறத்தாழ ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்கென மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை பற்றியும்;

(ii) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடமைப்புத்தேவைகள் பூர்த்திசெய்யப் படுவதற்கான ஏதாவது காலக்கெடுவையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1244/ '11

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1347/ '11

6.

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை ஆசிரிய சேவைக்குரிய, தற்போது நாட்டினுள் சேவையாற்றும் உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஆசிரியர்களில், மாகாண அரச சேவையிலும் மத்திய அரசின் கீழும் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) முழுக் கல்வி கட்டமைப்புக்கும் தேவையான உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது கல்வித் துறையிலுள்ள உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், உடற் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0993/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எரிவாயுக் கம்பனியானது எப்போது செல் கம்பனி லிமிடட்டிற்கு விற்கப்பட்டது என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் விலையையும் வீதத்தையும்;

(iii) எரிவாயுக் கம்பனியை விற்றபோது ஆட்சியிலிருந்த சனாதிபதியின் பெயரையும் அரசாங்கத்தையும்;

(iv) விற்ற திகதியிலிருந்து மீளக் கொள்வனவு செய்த திகதி வரையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தினையும்;

(v) செல் டேர்மினலிலே அரசாங்கம் கொண்டுள்ள பங்கினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல் கம்பனி லிமிடட்டின் பங்குகளை மீளவாங்குவதற்கு அரசாங்கம் செலுத்திய விலையினையும்;

(ii) அரசாங்கம் மீளவாங்கிய பங்குகளின் வீத்தையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட இந்த மீள் கொள்வனவு எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) விலைப் பெறுமதி குறித்து எவ்வாறு இணக்கம் காணப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1084/ '11

8\.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கொடல்லவத்த பாமன்வெல்ல வீதி, 1995.08.24 ஆம் திகதி இலங்கை சனநாயகக் சோசலிஷக் குடியரசின் வர்த்தமான அறிக்கை மூலம் அரசுக்குச் சொந்தமான வீதியென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நீளம் சுமார் 1.5 கி.மீ. என்பதையும்;

(iii) இவ்வீதியின் ஆரம்பமும் இறுதியும் வாகனப் போக்குவரத்து ஏற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்டு இடைநடுவிலுள்ள 100 மீற்றர் அளவிலான பகுதியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) இதனால் மக்கள் போக்குவரத்து பெருந்தடை ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதியை ஒருங்கிணைத்து போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் எப்போது என்பதையும்;

(iii) இதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1095/ '11

9\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமுர்த்தி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மாருக்கு தற்போது போசாக்குப் பொதியொன்று வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) சமுர்த்தி பெறும் குடும்பமொன்றில் புதிதாக ஓர் குழந்தை பிறக்கின்றபோது குழந்தைக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பரிசுப் பொதியொன்றறை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வலது குறைந்த அங்கத்தவரொருவரை கொண்ட குடும்பத்தின் பொருளாதார நிலையை கருத்திற் கொள்ளாது சமுர்த்தி உதவி பெற்றுக்கொடுக்கப்படும் என மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இற்றைவரை இதன் கீழ் பயன் பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1245/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சுற்றாடல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1368/ '11

11.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஒலுவில் துறைமுக அபிவிருத்தி நோக்கத்திற்காக PP/AM/3737ஆம் இலக்க நில அளவை வரைபின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டு காணிகளை சுவிகரித்தமைக்காக நட்டஈடுகள் வழங்கப்பட்ட காணி உரிமையாளர்களது பெயர்கள் என்னவென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) AD/DS/LD/LAOH/26 ஆம் குறியீட்டு இலக்கத்தின் கீழ் PP/AM/3737ஆம் இலக்க நில அளவை வரைபின் பிரகாரம் 2ஆம் இலக்க காணித்துண்டை அடையாளம் கண்டு சுவிகரித்தமைக்காக நாவிதன்வெளி சென்றல்கேம்ப் 4/11ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற ஜனாப் யூசுப் லெப்பை உதுமா லெப்பை என்பவருக்கு நட்டஈடு வழங்கப்பட்டதா என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0994/ ’10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு சென்றுள்ள பொலிஸ் தரப்பினர் மற்றும் ஆயுதப் படைத் தரப்பினர்களின் எண்ணிக்கையை வருடவாரியாகவும்;

(ii) ஐ.நா. வினால் படை வீரர் அல்லது பொலிஸார் ஒருவருக்கு செலுத்தப்பட்ட தொகையையும்;

(iii) அவர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள நாடுகளையும்;

(iv) ஒவ்வொரு நாட்டிற்கும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) படை வீரர்களையும் பொலிஸாரையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி சேவையில் ஈடுபடுத்துவதற்கான வேரேதும் காரணங்களுண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இடங்களையும்;

(iii) அவ்விடங்களுக்கு அவர்களை அனுப்பியதற்கான நோக்கத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1085/ ’11

13.

கௌரவ புத்திக பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1977 தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாத்தறை மாவட்ட மக்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக்கடன்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இக்காலப் பகுதியில் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் மொத்தப் பெறுமதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1977 தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரை இம்மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை பதிவழிப்பதற்கு அப்போதைய அரசு நடவடிக்கை எடுத்ததென்பதையும்;

(ii) இவ்வாறு பதிவழிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை மீள அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் கூட மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) பதிவழிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை கடன் பெறுநர்களிடமிருந்து மீள அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(ii) இக்கடன்களை மீள அறவிடப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாளரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1096/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சார வசதியில்லாத வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2010 மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது மின்சாரம் கிடைக்கப்பெறாத மண்ணெண்ணெய் பாவனையின் மூலம் ஒளியைப் பெற்றுக்கொள்கின்ற சகல குடும்பங்களுக்கும் மாதமொன்றுக்கு 5 லீட்டர் மண்ணெண்ணெய் வீதம் இலவசமாக வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களுக்கு இச்சலுகை பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்த வருமானம் பெறுபவர்களின் வீட்டு மின்சாரக் கட்டணப் பட்டியலில் 30% கழிவை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1246/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்),— (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2011 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாதுள்ளதால், குறிப்பிட்ட தெரிகுழுவுக்கு வழங்கப்பட்ட கால எல்லையை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2011ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மார்ச்சு மாதம் 04 ஆந் திகதிய 1695/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிய 1701/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.07.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.